ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 449) Aug (2) / 2025

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..5

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 267)

101. தத்தஸ்தத்த்வமயோ பூத்வா மலிநம் பூதபிண்டகம்
ஷாட்கோசிகமஸாரம் ச சோதயேத் தாரணாவசாத்

பொருள் – இதன் பிறகு, தத்வத்தை நன்கு உணர்த்த நிலையில், ஆறு கோசங்களில் உள்ள மலினமான பிண்ட சரீரத்தை “தாரணை” மூலம் பரிசுத்தம் செய்யவேண்டும்.

102. ப்ருதிவ்யாதீநி ஸர்வாணி தத்த்வாநி ஸ்வஸ்வகாரணே
தாரணாபிர்நயேதஸ்தம் அவ்யக்தாந்தாநி வை க்ரமாத்

பொருள் - தாரணையின் மூலம், ப்ருதிவீ (பூமி) முதலான அனைத்து தத்துவங்களையும், அவை ஏற்பட்ட காரணங்களில் ஒவ்வொன்றாகக் கலந்து, இறுதியில் அவ்யக்த தத்துவத்தில் லயிக்கும்படிச் செய்யவேண்டும்

103. க்ஷீரே க்ஷீரமிவாத்மாநம் மயி ஸம்மிச்ரயேத்தத:
பூத்வா லக்ஷ்மீமய: பச்சாத் பவேந்நாராயணாத்மக

பொருள் - பாலில் பால் கலந்து ஒன்றாவது போன்று, அந்த உபாஸகன் தன்னுளடைய ஆத்மாவை என்னுடன் ஒன்றாக்கிக் கொள்ளவேண்டும். இப்படியாக முதலில் லக்ஷ்மி தத்துவத்தால் நிரம்பி, பின்னர் நாராயண ஸ்வரூபத்தை அடைகிறான்.

104. தாரணாபந்தமாஸாத்ய சுத்தஸத்த்வேந சேதஸா
பரமாத்மாத்மகத்த்வம் யத் ஸா சக்தி: பரமா மதா

பொருள் – சுத்தசத்த்வமான சித்தத்துடன் தாரணையை நிலைநிறுத்துவதன் மூலம், அந்த உபாஸகன் உயர்ந்த பரமாத்ம தத்துவ சக்தியை அடைகிறான்.

ஶ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஶ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 414)

6-6-6. கற்பகக் கா அன நல் பல தோளற்கு
பொன் சுடர்க் குன்று அன்ன பூந்தண் முடியற்கு
நல் பல தாமரை நாள் மலர்க் கையற்கு என்
வில் புருவக் கொடி தோற்றது மெய்யே

பொருள் – கற்பகச் சோலை போன்று அதனைக் காட்டிலும் மேன்மை கொண்ட சிறந்த பல தோள்களைக் கொண்டவனாகவும்; காண்பதற்கு அழகாகவும் சுபமாகவும் உள்ளதான க்ரீடத்தைக் கொண்டவனாகவும்; அழகான பல இதழ்கள் கொண்ட தாமரையில் அன்று அலர்ந்த மலர் போன்ற திருக்கரங்கள் கொண்டவளாகவும் உள்ள அவனுக்கு, வில்லைப் போன்று அழகான புருவங்கள் கொண்டவளும், கொடி போன்று மெல்லியவளும் ஆகிய எனது பெண்பிள்ளை தனது சரீரத்தை இழந்தாள்.

அவதாரிகை - ஏகார்ணவசாயியானவனுடைய அவயவ ஸௌந்தர்யத்திலே அகப்பட்டு இவள் தன்னுடைய மெய் இழந்தா ளென்கிறாள்.

விளக்கம் – "ப்ரளயத்தின்போது எங்கும் நிறைந்த ஸமுத்திரத்தில் திருப்பள்ளி கொண்டவனுடைய திருமேனியின் உறுப்புகளுடைய அழகில் அகப்பட்ட இவள் தன்னுடைய சரீரத்தை இழந்தாள்", என்கிறாள்.

வ்யாக்யானம் - (கற்பகக்காவித்யாதி) தன் அவயவங்களைக் காட்டி இவள் அவயவியைக் கொண்டான். கற்பகச்சோலை போலேயாய், அள்ளளவன்றியே விலக்ஷணமான பல திருத்தோள்களையுடையவனுக்கு. (பொற்சுடரித்யாதி) ஒளியையுடைய பொன்மலை போலேயாய் தர்சநீயமாய்த் திருமுடிக்கு அநுரூபமான திருவபிஷேகத்தை யுடையனுக்கு. பூவென்று மாலைகளாலே அலங்க்ருதமென்றுமாம். இது ஸர்வாபரணங்களுக்கும் உபலக்ஷணம். (நற்பலவித்யாதி) நன்றாய்ப் பலவாய்ச் செவ்வித்தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கைகளையுடையவனுக்கு.

விளக்கம் – (கற்பகக்காவித்யாதி) -தனது திருமேனியின் பல்வேறு பாகங்களைக் காண்பித்து இவளுடைய சரீரத்தைத் தன் வசப்படுத்தினான். கற்பகச்சோலை போன்று பல கிளைகளைக் கொண்டதாக, அது மட்டும் அல்லாமல் மேன்மையான பல திருத்தோள்கள் கொண்டவனுக்கு. (பொற்சுடரித்யாதி) - ஒளி வீசும் பொன்மலை போன்று காண்பதற்கு இனிமையாக, திருமுடிக்கு ஏற்றதாக க்ரீடம் கொண்டவனுக்கு. “பூ” என்பதற்கு மாலைகளால் நன்கு அலங்கரிக்கப்பட்ட நிலை என்றும் கூறலாம். இது அனைத்து ஆபரணங்களுக்கும் குறிச்சொல் ஆகும். (நற்பலவித்யாதி) - நன்றாக, பலவாக, அழகாக உள்ள தாமரை மலர் போன்ற திருக்கரங்கள் கொண்டவனுக்கு.

வ்யாக்யானம் - (என் விற்புருவக்கொடி) வில் போலேயிருக்கிற புருவத்தையுடைய என் பெண். (கொடிபோலே யிருக்கிறவள்) ப்ரஹ்மாஸ்த்ரத்தைக் கொண்டு பட்டுக் கிடப்பாரைப்போலே, விஜய ஹேதுவான பரிகரத்தைக் கொண்டு கிடீர் தோற்றது! (தோற்றது மெய்யே) “ஊர்த்வம் மாஸாந் ந ஜீவிஷ்யே” என்னப் பண்ணும் வடிவைக் காட்டி, “ந ஜீவேயம் க்ஷணமபி” என்னப் பண்ணும் வடிவைக் கிடீர் கொண்டது. அவிதேய சரீரையானாள் என்று கருத்து.

விளக்கம் - (என் விற்புருவக்கொடி) - வில் போன்ற புருவங்கள் கொண்ட எனது பெண்பிள்ளை. (கொடிபோலே யிருக்கிறவள்) - ப்ரஹ்மாஸ்திரத்தைக் கொண்டு முடித்து கிடப்பவர்கள் போன்று, வெற்றிக்கு அடையாளமான கொடியைக் கொண்டு அல்லவோ தோற்றாள்! (தோற்றது மெய்யே) – ஸுந்தரகாண்டம் (40-10) - ஊர்த்வம் மாஸாந் ந ஜீவிஷ்யே – ஒரு மாதத்திற்கு மேல் நான் பிழைக்கமாட்டேன் – என்றுள்ள வடிவத்தைக் காண்பித்து, ஸுந்தரகாண்டம் (66-10) - ந ஜீவேயம்

க்ஷணமபி – ஒரு க்ஷணமும் கூடப் பிழைத்திருக்கமாட்டேன் - என்று செய்யும் வடிவத்தை கொண்டது காண்க. தன்வசப்படாமல் உள்ள சரீரத்தைக் கொண்டாள்.

6-6-7. மெய் அமர் பல்கலன் நன்கு அணிந்தானுக்கு
பை அரவின் அணைப் பள்ளியினானுக்கு
கையொடு கால் செய்ய கண்ண பிரானுக்கு என்
தையல் இழந்தது தன்னுடைச் சாயே

பொருள் – திருமேனியுடன் நன்றாகப் பொருத்தப்பட்டுள்ள ஆபரணங்களை, காண்பதற்கு இனிமையாக அளிந்துள்ளவனும்; நன்கு விரிந்த பணங்கள் கொண்ட ஆதிசேஷன் மீது திருக்கண்கள் வளர்பவனும்; திருக்கரங்களுடன் திருவடிகளும் நன்கு சிவந்துள்ளவனும்; அடியார்களுக்கு வசப்பட்டவனாக உதவுபவனும் ஆகிய க்ருஷ்ணனுக்கு, மேன்மையான ரூபம் கொண்ட எனது பெண்பிள்ளை, தனக்கே உரிய சோபையை இழந்தாள்.

அவதாரிகை - க்ஷீரார்ணவசாயியுடைய ஆபரண சோபாதிகளிலே அகப்பட்டு இவள்
லாவண்யத்தை யிழந்தாளென்கிறாள்.

விளக்கம் – “திருப்பாற்கடலில் சயனித்தபடி உள்ளவனுடைய ஆபரணங்களின் அழகில் அகப்பட்ட எனது மகள், தனது லாவண்யத்தை இழந்தாள்”, என்கிறாள்.

வ்யாக்யானம் – (மெய்யமர் பல்கலன்) திருமேனியிலே பூத்தாற்போலே பொருந்தி யிருந்துள்ள கிரீடாதி நூபுராந்தமான ஆபரணங்கள். (நன்கணிந்தானுக்கு) பூணவல்லபடியாலே வந்த அழகு. (பையரவித்யாதி) ஸ்வஸ்பர்சத்தாலே விகஸிதமான பணங்களையுடையவனாய், நாற்றம் மென்மை குளிர்த்தி இவற்றை ப்ரக்ருதியாகவுடையவனைப் படுக்கையாக உடையவனாய், அதிலே கண்வளர்ந்தருளுகிறவனுக்கு. இதுவும் ஓர் ஆபரண விசேஷம் போலேகாணும். அநந்த முகமான ஆபரணமிறே. கீழ்ச்சொன்ன ஒப்பனை நிறம் பெறும் படுக்கையிறே.

விளக்கம் – (மெய்யமர் பல்கலன்) - திருமேனியில் பூத்தது போன்று நன்று பொருந்தியுள்ள க்ரீடம் தொடக்கமாக, நூபுரம் என்பதான கால்தண்டை முடிய

உள்ள அனைத்து ஆபரணங்கள். (நன்கணிந்தானுக்கு) - பூணுாவதற்கு ஏற்றபடியாக அவன் உள்ளதால் வந்த அழகு. (பையரவித்யாதி) - தனது திருமேனியின் ஸ்பர்சத்தால் நன்கு விரிந்த பணங்கள் கொண்டவனும், "நறுமணம், குளிர்ச்சி, மென்மை" போன்றவற்றைத் தனது இயல்பாகக் கொண்டவனும் ஆகிய ஆதிசேஷனைத் தன் படுக்கையாக கொண்டவன். அவனில் திருக்கண்கள் வளர்பவன். இதுவும் ஓர் ஆபரணமே ஆகும். எண்ணற்ற முகங்கள் கொண்ட ஆபரணம் ஆகும். மேலே கூறப்பட்ட பலவிதமான இவனுடைய தன்மைகள் அனைத்தும், தங்களுடைய இயல்பை அடைவது இந்த படுக்கையில் ஆகும்.

வ்யாக்யானம் - (கையித்யாதி) திருமேனிக்குப் ப்ரபாகமான சிவப்பையுடைய திருக்கைகளையும், திருவடிகளையுமுடையவனாய் உபகாரசீலனான க்ருஷ்ணனுக்கு. திருவநந்தாழ்வானோட்டைச் சேர்த்தியாலேயாயிற்று அவயவங்கள் தொடக்கமானவை பூர்ணமாயிற்று. (என் தையலித்யாதி) என் பெண்பிள்ளை யிழந்தது, மாணிக்கத்தின் ஒளி போலே தனக்கு நிறங்கொடுக்கும் லாவண்யத்தை; கழற்றிப் பூணும் ஆபரணத்தைக் காட்டி, கழற்றவொண்ணாத ஆபரணத்தைக் கைக்கொண்டான். தையலென்பது பெண் பேர். சாய் - லாவண்யம்.

விளக்கம் - (கையித்யாதி) - திருமேனி நிறத்தைச் சேரும்விதத்தில் அழகான சிகப்பு நிறம் உடையதிருக்கரங்கள் மற்றும் திருவடிகள் ஆகியவற்றைக் கொண்டவனும், உபகாரங்கள் பலவும் செய்பவனும் ஆகிய க்ருஷ்ணனுக்கு, ஆதிசேஷனுடன் உண்டான சேர்த்தியால் அல்லவோ இவனுடைய திருமேனி உறுப்புகள் தொடக்கமாக உள்ள பலவும் பரிபூர்ணமாக உள்ளன? (என் தையலித்யாதி) – என் பெண்பிள்ளை இழந்தது என்னவென்றால், மாணிக்கத்தின் ஒளி போன்று தனக்கு நிறம் அளிக்கும் தனது லாவண்யத்தை ஆகும். ஒவ்வொரு முறையும் கழற்றி மீண்டும் அணியலாம்படியாக உள்ள தனது ஆபரணங்களைக் காண்பித்து, கழற்ற இயலாதபடியான இந்தப் பெண்பிள்ளை என்ற ஆபரணத்தைக் கைக்கொண்டான். தையல் என்றால் பெண்.

6-6-8. சாயக் குருந்தம் ஒசித்த தமியற்கு
மாயச் சகடம் உதைத்த மணாளற்கு
பேயைப் பிணம் படப் பால் உண் பிரானுக்கு என்
வாசக் குழலி இழந்தது மாண்பே

பொருள் – அஸுரர்கள் புகுந்தது போன்றுள்ள குருந்தமரம் வேருடன் சாயும்படியாக முறித்த அஸஹாய வீரனாகவும்; சக்கரமானது ஓடும்படி உதைத்து, அதன் மூலம் எனது மகள், இவன் அல்லாமல் வேறு யாருக்கும் வசப்படாமல் தனக்கு மட்டும் வசப்படும்படிச் செய்பவனும்; பூதனை என்னும் பேயானவள் பிணமாக விழும்படியாக அவளுடைய முலைப்பால் பருகி உபகாரகனாகவும் உள்ள இவனுக்கு, பரிமளம் வீசும்படியாக உள்ள அழகான குழல் கொண்ட எனது பெண்பிள்ளை, தனது பெண்மைத்தன்மை என்ற மாட்சியை இழந்தாள்.

அவதாரிகை - க்ருஷ்ணனுடைய விரோதி நிரஸநத்துக்குத் தோற்று இவள் தன்னுடைய ஸ்த்ரீவத்தை இழந்தாள் என்கிறாள்.

விளக்கம் – "க்ருஷ்ணனுடைய 'விரோதிகளை வீழ்த்தும் தன்மை' என்பதற்குத் தோற்று, எனது மகள் தனது பெண்மைத்தமையை இழந்தாள்", என்கிறாள்.

வ்யாக்யானம் - (சாயக்குருந்தமொசித்த தமியற்கு) அஸுராவேசத்தாலே தழைத்துப் பூத்து நின்ற குருந்தத்தை வேரோடே சாய்ந்து விழும்படி முறித்த தனியற்கு. நம்பி மூத்தபிரானை ஒழியவே, தனிவீரஞ் செய்தவற்கு. தான் அத்தனிமையிலே சென்று உதவக் காணும் இவளுக்கு நினைவு. (மாயச்சகடமுதைத்த மணாளற்கு) க்ருத்ரிம சகடமென்னுதல்; "தளர்ந்தும் முறிந்தும் சகட அசுரருடல் வேறாப் பிளந்து வீய" என்கிறபடியே சகடம் உருமாயும்படி என்னுதல். (மணாளற்கு) ஸ்ரீஜநகராஜன் திருமகளுக்கு தநுர்ப்பங்கம்போல, இவ்வபதாநத்தைக் காட்டியாயிற்று இவளை அநந்யார்ஹையாக்கிற்று.

விளக்கம் – (சாயக்குருந்தமொசித்த தமியற்கு) - அஸுர ஆவேசத்தால் நன்கு தழைத்துப் பூத்து நின்ற குருந்த மரத்தை, வேருடன் சாய்ந்து விழும்படியாக முறித்து, வேறு துணை அவசியம் இல்லாதவனுக்கு. தனது மூத்த சகோதரன் இன்றி, தனியாக நின்று தனது வீரத்தைக் காண்பிப்பதற்காக இவ்விதம் செய்தான். தான் தனியாகச் சென்று நரகாஸுர யுத்தத்தில் சத்யபாமா செய்தது போன்று செய்வதற்கு இவளுக்குச் சிந்தனையாக உள்ளது. (மாயச்சகடமுதைத்த மணாளற்கு) - வஞ்சனை நிறைந்த சக்கரம். திருவாய்மொழி (6-9-4) - தளர்ந்தும் முறிந்தும் சகட அசுரருடல் வேறாப் பிளந்து வீய - என்பதற்கு ஏற்ப, அந்தச் சக்கரமானது தனது உருவத்தை

இழந்து அழியும்படியாகச் செய்தல். (மணாளற்கு) - ஜனகராஜனுடைய திருமகளுக்கு, வில்லை முறித்தது என்ற செயலைக் காண்பித்தது போன்று, இவன் எனது மகளுக்கு இவ்விதம் தான் செய்த செயலைக் காண்பித்து, இவளைத் தன்வசப்படுத்தினான்.

வ்யாக்யானம் - (பேயைப் பிணம்படப் பாலுண் பிரானுக்கு) சூர்ப்பணகாவைப்போலே ஓர் அநர்த்தத்தை விளைக்க உயிரோடேவிடாதே, பூதனையைப் பிணமாய் விழும்படி முலையுண்ணவல்ல ம்ஹோபகாரகனுக்கு. (என் வாசக்குழலி) நைஸர்க்கிக பரிமள குழலையுடைய என் பெண்பிள்ளை. அவனை "ஸர்வகந்த:" என்று சொல்லுகைக்கு அடி. இத்தலையையிட்டு, "வாசஞ்செய்பூங்"குழலாளிறே. (இழந்தது மாண்பே). தன் பும்ஸ்த்வ ப்ரயுக்தமான செயல்களையெல்லாங்காட்டி, இவளுடைய ஸ்த்ரீத்வத்தைக் கொண்டான். மாண்பு - மாட்சிமை. ஸ்த்ரீத்வம், அழகு என்றுஞ் சொல்லும் மாண்பை.

விளக்கம் - (பேயைப் பிணம்படப் பாலுண் பிரானுக்கு) – சூர்ப்பணகைப் போன்று உயிருடன் விட்டால், பூதனை அந்த அரக்கி போன்று வேறு கெடுதல் செய்துவிடுவாள் என்று எண்ணி, உயிருடன் விடாமல்,பிணமாக விழும்படியாக, அவளுடைய முலைப்பாலைப் பருகவல்ல உபகாரகனாகிய அவனுக்கு. (என் வாசக்குழலி) - இயல்பாகவே பரிமளம் நிறைந்த கூந்தல் கொண்ட எனது பெண்பிள்ளை. அவனை, உபநிஷத்துக்கள் – ஸர்வகந்த: - அனைத்து நறுமணமும் அளிப்பவன் – என்று கூறுவதன் காரணம், இவளை முன்னிட்டே ஆகும். இவள் இவ்விதம் அவனுக்கும் நறுமணம் அளிப்பவள் என்பதற்கு ப்ரமாணம், திருவாய்மொழி (10-10-2) – வாசம் செய் பூங்குழல் – என்பதாகும். (இழந்தது மாண்பே) - தனது ஆண்மைக்கே உரிய அனைத்து செயல்களையும் காண்பித்து, இவளுடைய பெண் தன்மையை அபகரித்துக் கொண்டான். மாண்பு என்றால் மாட்சிமை.

6-6-9. மாண்பு அமை கோலத்து எம் மாயக் குறளற்கு
சேண் சுடர்க் குன்று அன்ன செஞ்சுடர் மூர்த்திக்கு
காண் பெரும் தோற்றத்து எம் காகுத்த நம்பிக்கு என்
பூண் புனை மென்முலை தோற்றது பொற்பே

பொருள் – அழகு அமைந்த வடிவம் கொண்டவனும்; அதன் மூலம், எங்களையும் மஹாபலியையும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி வஞ்சித்தவனும்; தேஜோமயமான மலை போன்று சிறந்த ஒளியைக் கொண்டதான திருமேனியை உடையவனும்; என்னைப் போன்றவர்களுக்கு அனுபவிக்கதக்கப்படி உள்ள சக்ரவர்த்தித்திருமகனும்; அனைத்து விதங்களிலும் பரிபூர்ணமாக உள்ளவனும் ஆகிய அவனுக்கு, ஆபரணங்களைத் தரித்த மேன்மையான ஸ்தனங்களை கொண்ட எனது பெண்பிள்ளை, தனது அழகை இழந்தாள்.

அவதாரிகை - ஸ்ரீவாமநாத்யநேக அவதாரங்களிலே யகப்பட்டு இவள் தன்னழகை இழந்தா ளென்கிறாள்.

விளக்கம் – "ஸ்ரீவாமனன் போன்ற பல அவதாரங்களில் அகப்பட்ட இந்தப் பெண்பிள்ளை, தனது அழகை இழந்தாள்", என்கிறாள்.

வ்யாக்யானம் - (மாண்பு இத்யாதி) அழகு சமைந்த ஒப்பனையையுடையனாய், ஆச்சர்யமான வேஷத்தையுடைய ஸ்ரீவாமநனுக்கு. மாண்பு - அழகு. மாயமென்று வஞ்சநையாகவுமாம். (சேண் சுடர் இத்யாதி) அடியிலே நீர் வார்த்துக் கொடுத்தவாறே வளர்ந்தபடி. ஓங்கிப் புகரையுடைய மலைபோலே அழகிய ஒளியையுடைய வடிவையுடையவனுக்கு. (காண்பெருந் தோற்றத்து) தோற்றம் - அழகு. கண்ணுக்கினியதாய் அபரிச்சேத்ய போக்யமான ஸந்நிவேசத்தையுடைய என்னுதல். "ஜந்ம ராமஸ்யஸுமஹத்" என்கிற அவதார மஹத்வமாதல். (எம் காகுத்த நம்பிக்கு) குணபூர்ணனான சக்ரவர்த்தித்திருமகனுக்கு. "தயரதற்கு மகன் தன்னையன்றி மற்றிலேன்" என்னுமவறிறே. "குணாநாமாகரோ மஹாந்".

விளக்கம் – (மாண்பு இத்யாதி) - திருயஞ்ஞோபவீதம், க்ருஷ்ணாஜிநம் என்ற மான்தோல், மௌஞ்சி என்னும் தர்ப்பை போன்ற பலவற்றையும் கைக்கொண்டு, அவற்றையே தனது ஒப்பனையையாகக் கொண்ட அழகும்; வியக்கவைக்கும் திருமேனியும். இவற்றைக் கொண்டு ஸ்ரீவாமநனுக்கு. மாண்பு என்றால் அழகு, மாயம் என்றால் வஞ்சனை. (சேண் சுடர் இத்யாதி) – "அடியில்" என்றால் "முதலில்" அல்லது "வேர்" என்று பொருள். அதாவது அங்கு நீர் வார்த்துக் கொடுத்தவுடன் வளர்ந்த விதம். ஓங்கிய புகர் கொண்ட மலை போன்று அழகான ஒளி வீசும் வடிவத்தைக் கொண்டவனும். (காண்பெருந் தோற்றத்து) - தோற்றம் என்றால்

அழகு. “காண்” என்பது காணப்படுவதாக, அதாவது காண்பதற்கு இனிமையாக. அதாவது கண்களுக்கு இனிமையானதாக, அளவிட இயலாத இனிமை கொண்ட திருமேனியைக் கொண்டவன். பாலகாண்டம் (3-10) – ஜந்ம ராமஸ்யஸுமஹத் - இராமனுடைய மஹாத்ம்யம் கொண்ட அவதாரம் – என்பதாக அவதாரம் மஹாத்ம்யம். (எம் காகுத்த நம்பிக்கு) - குணத்தில் பரிபூர்ணமாக உள்ள சக்ரவர்த்தித்திருமகனுக்கு. “எம்” என்பது ஏன் என்றால், திருவாய்மொழி (3-6-8) - தயரதற்கு மகன் தன்னையன்றி மற்றிலேன் - என்பதாக உள்ளவர் என்பதால் ஆகும். கிஷ்கிந்தாகாண்டம் (15-21) – குணாநாமாகரோ மஹாந் - அனைத்து குணங்களுக்கும் இருப்பிடம் – என்பதால் “நம்பி” என்றாள்.

வ்யாக்யானம் - (என் பூண் புனை மென்முலை) ஆபரணத்தாலே அலங்க்ருதமாய், விரஹ ஸஹமன்றிக்கேயிருந்துள்ள முலையையுடையவள். (தோற்றது பொற்பே) பொற்பென்று அழகு. “பூண்புனை மென்முலை” என்கையாலே, ஒப்பனையால் வந்த அழகையிழந்தாள். “மலராள் தனத்துள்ளான்” என்கிறபடியே அவனைத் தன் முலையழகாலே புறம்பொன்று அறியாதபடி பண்ணி புஜிக்குமவள்கிடீர் தோற்றாள் என்கை.

விளக்கம் - (என் பூண் புனை மென்முலை) - கடந்த பாசுரத்தில் “அழகை இழந்தாள்” என்று கூறினாள்; இங்கும் “பொற்பு - அழகு” என்று கூறினாள்; இதனால், “கூறியது கூறல்” என்ற தோஷம் ஏற்படாதா என்பதற்கு விடை அளிக்கிறார். ஆபரணத்தால் நன்கு அலங்கரிக்கப்பட்ட, விரகத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாத மென்மையான ஸ்தனங்கள் கொண்டவள். (தோற்றது பொற்பே) - பொற்பு என்றால் அழகு. “பூண்புனை மென்முலை” என்பதால், ஒப்பனையால் வந்த அழகை இழந்தாள் என்றாகிறது; ஆகவே “கூறியது கூறல்” என்னும் தோஷம் ஏற்படவில்லை. மூன்றாம் திருவந்தாதி (3) - மலராள் தனத்துள்ளான் - என்பதற்கு ஏற்ப, அவனைத் தனது ஸ்தனங்களுடைய அழகால் வென்று, வேறு எதனையும் அறியாதபடி செய்து, அவனை அனுபவிப்பவள் அல்லவோ இன்று தோற்றாள்!

6-6-10. பொற்பு அமை நீள் முடிப் பூந்தண் துழாயற்கு
மல் பொரு தோள் உடை மாயப் பிரானுக்கு
நிற்பன பல் உருவாய் நிற்கும் மாயற்கு என்
கற்பு உடையாட்டி இழந்தது கட்டே

பொருள் - அழகு பொருந்திய உயர்ந்த க்ரீடமும், காண்பதற்கு இனிமையும் களைப்பை ஆற்றவல்லதும் ஆகிய திருத்துழாய் மாலையும் கொண்டவனும்; அப்படிப்பட்ட "உயர்ந்தவன்" என்பதை வெளிப்படுத்தக்கூடிய இனிமையான அடையாளங்களுடன் வந்து ப்ரபலரான மல்லர்களுடன், தனது திருத்தோள்களில் பூசியிருந்த சாந்து அழியாதபடி யுத்தம் செய்யவல்ல மாயனும்; மதுராவில் தனது அழகைப் பெண்களுக்குக் காண்பித்து உபகாரம் செய்தவனும்; பலவிதமான பொருள்களையும் தனது திருமேனியாகக் கொண்டவனும்; ஆயினும் அவற்றின் தோஷங்கள் தன்னை அடையாதபடி உள்ளவனும் ஆகிய அந்த மாயனுக்கு, அறிவுடன் கூடியவளாக உள்ள எனது பெண்பிள்ளை, தனது பெண்மைக்கே உரிய மரியாதையை இழந்தாள்.

அவதாரிகை – "பரத்வமென்ன, அவதாரமென்ன ஜகதாகாரதையென்ன!! இவற்றையடங்கக் காட்டி இவளுடையது எல்லாவற்றையும் கொண்டான்", என்கிறாள்.

விளக்கம் – "பரத்வம், அவதாரம், ஜகத்காரணம் போன்ற பலவற்றையும் இவளுக்கு முற்றிலுமாகக் காண்பித்து, இவளுடைய அனைத்தையும் அவன் வாங்கிக் கொண்டான்", என்கிறாள்.

வ்யாக்யானம் - (பொற்பமை இத்யாதி) அழகு சமைந்திருப்பதாய் ஆதிராஜ்ய ப்ரகாசகமான திருவபிஷேகத்தின் மேலே, ஐச்வர்யஸூசகமான திருத்துழாய்மாலையை யுடையவனுக்கு. (பூந்தண்துழாய்) ஸ்வஸ்பர்த்தாலே பூத்து ச்ரமஹரமாயிருக்கை. (மற்பொரு இத்யாதி) வந்தவதரித்து மற்பொரு தோளையுடையனாயிருக்கை. (மாயப்பிரானுக்கு) சாத்தின சாந்தழியாதபடி மல் பொருத ஆச்சர்யம். (பிரானுக்கு) ஸ்ரீமதுரையிற்பெண்களுக்கு அழகை உபகரிக்கை. "சாவத் தகர்த்த சாந்தணி தோள்சதுர"னிறே. மற்றும் ஆச்சர்யமான உபகாரங்களைப் பண்ணினவனுக்கு என்றுமாம்.

விளக்கம் - (பொற்பமை இத்யாதி) - அழகு நன்கு பொருந்தியுள்ளதாக, ஆதிராஜ்யத்தை வெளிப்படுத்தவல்ல திருமுடியின் மேல், தனது ஐச்வர்யத்தை மறைமுகமாக வெளிப்படுத்தவல்ல திருத்துழாய் மாலையை உடையவனுக்கு.

(பூந்தண்துழாய்) - இவனுடைய ஸ்பர்சம் காரணமாக நன்கு பூத்து, காண்பவர்கள் களைப்பைப் போக்கும்படி உள்ள துளசிமாலை. (மற்பொரு இத்யாதி) - இங்கு வந்து அவதரித்து மற்போர் செய்யவல்ல திருத்தோள்கள் கொண்டவனாக இருந்தான். (மாயப்பிரானுக்கு) - தனது திருத்தோள்களில் பூசியிருந்த சாந்து அழியாதபடி மல்லர்களுடன் யுத்தம் செய்த வியப்பு. (பிரானுக்கு) - மதுராவில் உள்ள பெண்களுக்கு தனது அழகை உபகரித்தவன். ஆனால் சாந்து அழியாமல் மல்யுத்தம் செய்தானோ என்றால், பெரியாழ்வார் திருமொழி (4-2-6) சாவத் தகர்த்த சாந்தணி தோள்சதுரன் – என்பது காண்க. மேலும் வியக்க வைக்கும் உபகாரங்களைச் செய்தவன் என்றும் கூறலாம்.

வ்யாக்யானம் - (நிற்பன இத்யாதி) ஸ்த்தாவர ஜங்கமாத்மகமான ஸகல பதார்த்தங்களுக்கும் அந்தர்யாமியாய் நிற்கச்செய்தே, தக்கத தோஷைரஸம் ஸ்ப்ருஷ்டனாய் நிற்கிற ஆச்சர்யபூதனுக்கு. (என் கற்புடையாட்டி) துக்கவறிவையுடைய என் மகள். “தத்தஸ்ய ஸத்ருசம்பவேத்” என்றிருக்கும் அறிவிறே. (இழந்தது கட்டே) தனக்குள்ளவற்றை நேராகக் காட்டி இவள்பக்கல் உள்ளவற்றை நேராகக் கொண்டான். கட்டு - கட்டடங்க, கட்டென்று மர்யாதையாய்; லோக மர்யாதையை இழந்தாளென்றுமாம்.

விளக்கம் – (நிற்பன இத்யாதி) – தாவரங்கள் மற்றும் விலங்குகள் என்பது போன்ற அனைத்து வஸ்துக்களுக்கும் அவற்றின் ஆத்மாவாக, அந்தர்யாமியாக உள்ளபோதிலும், அவற்றின் தோஷங்கள் தன்னிடம் வந்து சேராமல் உள்ள வியக்க வைக்கும் நிலை. (என் கற்புடையாட்டி) - மிகுந்த அறிவைக் கொண்ட எனது மகள். மிக்க அறிவு எது என்பதற்கு ப்ரமாணம், ஸுந்தரகாண்டம் (39-30) - தத்தஸ்ய ஸத்ருசம்பவேத் - என்னை அவர் வந்து அழைத்துச் செல்வதே அவருக்கு ஏற்ற செயல் - என்று கூறவல்ல அறிவு. (இழந்தது கட்டே) - தனக்குள்ள அனைத்தையும் நேராகக் காண்பித்து, இவளிடம் உள்ள அனைத்தையும் நேரடியாகக் கொண்டான். கட்டு என்பது உலகினர் வைத்துள்ள மரியாதை; அதனை இழந்தாள் என்று கூறலாம்.

6-6-11. கட்டு எழில் சோலை நல் வேங்கடவாணனைக்
கட்டு எழில் தென் குருகூர்ச் சடகோபன் சொல்
கட்டு எழில் ஆயிரத்து இப்பத்தும் வல்லவர்
கட்டு எழில் வானவர் போகம் உண்பாரே

பொருள் – செறிவினைக் கொண்ட அழகு பொருந்திய சோலைகள் நிறைந்ததும், பகவானை மிகவும் எளிமையாகக் கொண்டு தரும் நன்மை உடையதும் ஆகிய திருவேங்கடமலைக்கு நிர்வாஹகனாகிய திருவேங்கடவனை, அரண் அழகு கொண்டதும், காண்பதற்கு இனிமையாகவும் உள்ள ஆழ்வார்திருநகரிக்கு நிர்வாஹகரான நம்மாழ்வார் அருளிச்செய்த தொடை அழகு மிக்கதான ஆயிரத்தில் உள்ள இந்தப் பத்தை, பொருள் உணர்ந்து கற்கவல்லவர்கள், சிறந்த வகுப்பு அழகு கொண்ட நித்யஸூரிகளுடய இன்பத்தை அனுபவிக்கப் பெறுவர்.

அவதாரிகை - நிகமத்தில், இத்திருவாய்மொழி வல்லவர்கள் நித்யசூரிகள் போகத்தை புஜிக்கப் பெறுவரென்கிறார்.

விளக்கம் - இறுதியாக, “இந்தத் திருவாய்மொழியைக் கற்க வல்லவர்கள், நித்யஸூரிகளுடைய இன்பத்தை அனுபவிக்கப் பெறுவர்”, என்கிறார்.

வ்யாக்யானம் - (கட்டெழில் இத்யாதி) கடியென்கிற இத்தை கட்டென்று வலித்ததாய், பரிமளத்தையுடைத்தான நல்ல சோலை. (நல்வேங்கடம்) சேஷ சேஷிகள் இருவர்க்கும் உத்தேச்யமான திருமலை. (வாணனை) நிர்வாஹகனை. திருவேங்கடமுடையானை யாயிற்றுக் கவிபாடிற்று. “திருவேங்கடத்தென்னானை என்னப்பனெம்பெருமானுளனாக என்னாவிலின் கவியானொருவர்க்கும் கொடுக்கிலேன்” என்றிருக்கும் அவரிறே. (கட்டெழில் தென்குருகூர்) கட்டென்று அரண்; அரணையுடைய திருநகரி.

விளக்கம் - (கட்டெழில் இத்யாதி) - “கடி” என்ற சொல்லானது “கட்டு” என்று வந்தது; பரிமளம் நிறைந்த நல்ல சோலை என்று பொருள். (நல்வேங்கடம்) - நன்மை எது? கைங்கர்யம் செய்வதற்கு ஏகாந்தமான இடமாக உள்ளதால், அடிமைத்தொழில் செய்பவர்களுக்கு ஏற்றது; இவர்களை அடிமைத்தனம் கொள்வதற்காகவே ஏகாந்தமாக உள்ள இடம் என்பதால் எஜமானனுக்கு ஏற்றது; ஆகவே இருவருக்கும் ஏற்ற திருமலை. (வாணனை) - நிர்வாஹகனை. திருவேங்கடமுடையானை அல்லவோ இங்கு பாடினார்! திருவாய்மொழி (3-9-1) - திருவேங்கடத்தென்னானை என்னப்பனெம்பெருமானுளனாக என்னாவிலின் கவியானொருவர்க்கும் கொடுக்கிலேன் - என்று உள்ளவர் அல்லவோ இவர்?

(கட்டெழில் தென்குருகூர்) - கட்டு என்பது அரண்; அரண் அழகு பொருந்திய ஆழ்வார்திருநகரி.

வ்யாக்யானம் - (கட்டெழிலாயிரம்) கட்டென்று தொடை; அழகிய தொடையை யுடைத்தாகை. (கட்டெழில் வானவர்) கட்டடங்க நல்லரான நித்யசூரிகள். போக விசேஷணமாகவுமாம். ஸம்ஸாரத்தில் போகங்கள் கர்மநிபந்தநமாகையாலே அல்பமா யஸ்த்திரமா யிருக்குமிறே, ஸ்வரூபாநுரூபமாகையாலே ஸம்ருத்தமாய் நித்யமாயிருக்கை. நாலடியிலும், கட்டென்கிற ரப்தம் ஸாகல்ய பரமாகவும். நீர்மைக்கு எல்லையான திருமலை ஆச்ரயணீயஸ்த்தலம்; மேன்மைக்கெல்லையான பரமபதம் அநுபவஸ்த்தாநம்; "ஒன்றியாக்கை புகாமை உய்யக்கொள்வான் நின்றவேங்கடம்".

விளக்கம் - (கட்டு எழில் ஆயிரம்) - கட்டு என்பது தொடை. அதாவது நல்ல தொடை கொண்டது. (கட்டெழில் வானவர்) - ஏற்ற தாழ்வு இன்றி அனைவரும் சமமாக உள்ள நித்யஸூரிகள். அல்லது "கட்டு" என்பதை இனிமைக்கு அடைமொழியாகவும் கொள்ளலாம். அங்கு இந்த இனிமை சிறந்ததாக இருக்கும். ஏன்? ஸம்ஸாரத்தில் உள்ள இனிமைகள் அனைத்தும் கர்மம் காரணமாக வருவதால், அற்பமாகவும் நிலையற்றதாகவும் இருப்பவை ஆகும்; ஆனால் ஸ்வரூபத்திற்கு ஏற்றபடி உள்ளதால், அங்குள்ள இனிமைகள் அனைத்தும் வளர்ந்தபடி நித்யமாக உள்ளன. அல்லது நான்கு அடிகளிலும் உள்ள "கட்டு" என்பதற்கு, "முழுவதும்" என்பதாகவும் பொருள் கொள்ளலாம். நீர்மைக்கு எல்லையாக உள்ள திவ்யதேசம் திருமலை; அனைவருக்கும் அண்டும்படி உள்ளது; மேன்மைக்கு எல்லையாக உள்ளது பரமபதம்; இது அனைவரும் எப்போதும் அனுபவிக்கும்படி உள்ளது. ஆனால் அடையத்தக்கவிதமாக திருவேங்கடம் உள்ளதோ என்றால், திருவாய்மொழி (9-3-8) - ஒன்றியாக்கை புகாமை உய்யக்கொள்வான் நின்றவேங்கடம் - என்பது காண்க.

திருவாய்மொழி ஆறாம் பத்து ஆறாம் திருவாய்மொழி ஸம்பூர்ணம்

திருவாய்மொழி ஆறாம் பத்து ஏழாம் திருவாய்மொழி
உண்ணுஞ்சோறு - ப்ரவேசங்கள்

வ்யாக்யானம் - கீழில் திருவாய்மொழியிலே, மோஹித்துக் கிடக்கிற தன் மகளுடைய அவஸாதத்தைக் கண்ட திருத்தாயாரானவள், "அது போயிற்றது, இது போயிற்றது" என்று அவன் திருநாமத்தைச் சொல்லக் கூப்பிட்டு, இவள்தானும் மோஹித்தாள்; திருநாம ப்ரஸங்கத்தாலே பெண் உணர்ந்தெழுந்திருந்து புறப்பட்டுத் திருக்கோளூரேறப் போனாள்; திருத்தாயாரும் வாசனையாலேயுணர்ந்து படுக்கையைப் பார்த்தாள்; வெறும் படுக்கையாய்க் கிடந்தது; இனி, இவள் என் வயிற்றிற் பிறப்பாலும், தன் ப்ரக்ருதியாலும், இங்கிருந்த நாள் தேஹ யாத்ரையிருந்தபடியாலும், இவள் திருக்கோளூரேறப் புறப்பட்டுப் போனாள் என்று அறுதியிடுகிறாள்.

விளக்கம் – கடந்த திருவாய்மொழியில் பராங்குசநாயகியின் நிலையைக் குறித்து தானே உரைக்க இயலாமல் மயங்கிக் கிடந்த காரணத்தால், அவளுடைய தாயார் அல்லவோ உரைக்கவேண்டியதாக இருந்தது? இந்தத் திருவாய்மொழியில், இந்தப் பெண்பிள்ளை திருக்கோளூர் சென்றது குறித்து திருத்தாயார் உரைக்கிறாள். தனது தாயார் தனது அருகில் உள்ளபோதிலும், அவள் அறியாமல் இவள் திருக்கோளூர் சென்றது எப்படி? மயக்கத்தில் கிடந்த இவள், தனது சுயநினைவு அடைந்தது எப்படி என்ற சந்தேகத்திற்கு பதில் அளிக்கும்விதமாகத் தொடங்குகிறார். கடந்த திருவாய்மொழியில், மயங்கிக் கிடந்த தனது மகளுடைய துன்பத்தைக் கண்ட திருத்தாயார், "இது போயிற்று, அது போயிற்று [அதாவது நிறத்தை இழந்தாள், குணத்தை இழந்தாள் என்பது போன்று பலவும்]" என்று அவனுடைய திருநாமத்தைக் கூறி அழைத்தபடி இருந்தாள். தொடர்ந்து தாயாரும் மயங்கினாள். ஆனால் தாயார், அவனது திருநாமத்தை தொடர்ந்து கூறும்படி இருந்ததால், அவற்றைக் கேட்ட இந்தப் பெண்பிள்ளை தனது சுயநினைவு திரும்பியவளாக எழுந்து, அங்கிருந்து புறப்பட்டு, திருக்கோளூருக்குச் சென்றாள். சிறுது நேரத்தில் தனது பெண்பிள்ளையின் வாஸனை அறிந்தவளாக சுயநினைவு பிறந்து, படுக்கையை நோக்கினாள். அது வெறும் படுக்கையாகக் கிடந்தது. உடனே அவள்

தனது மனதில், "எனது வயிற்றில் பிறந்ததாலும், தனது தன்மையாலும், இங்கு இருந்த நாட்களில் இவளுடைய நிலையை அறிந்ததாலும், இங்கிருந்து புறப்பட்டு திருக்கோளூர் சென்றிருக்கிறாள்", என்று திருத்தாயார் தீர்மானித்தாள்.

வ்யாக்யானம் - வலயாதிகளெல்லாம் இழந்தாளாகில் இவள் தன்னை நமக்கிழக்க வேண்டாவிறே என்றிருந்தாள், கீழிற்றிருவாய்மொழியில். இத் திருவாய்மொழியில், இவள் தன்னையும் இழந்தோமென்று கூப்பிடுகிறாள்.

விளக்கம் – ஆனால் கடந்த திருவாய்மொழியிலும், திருத்தாயாருக்கு தனது பெண்பிள்ளை விஷயத்தில் துக்கம் இருந்தது. அதற்கும், இந்தத் திருவாய்மொழிக்கும் என்ன வேறுபாடு என்பதைக் கூறுகிறார். கடந்த திருவாய்மொழிகளில் திருத்தாயார் தனது மனதில், "இவளுடைய மாலை போன்றவற்றை இழந்தாலும், இவளை நாம் இழக்கவில்லை" என்று இருந்தாள். ஆனால் இந்தத் திருவாய்மொழியில், "இவளையும் இழந்தோம்", என்று அழைக்கிறாள்.

வ்யாக்யானம் - ஆளவந்தார் கோஷ்டியிலே "உண்ணுஞ் சோற்றிற் பிராட்டிக்கோ, கள்வன் கொல்லிற் பிராட்டிக்கோ அஞ்சவேண்டுவது?" என்று கேட்க; "இருவராய்ப் போனவர்களுக்கு வயிறெறிய வேணுமோ? தனிவழியே போனவளுக்கன்றோ வயிறெறிய வேண்டுவது!" என்றிருந்த முதலிகள் சொல்ல; "அங்ஙனன்றகாணுங்கோள்! இருவராய்ப் போனவர்களாகையாலே, இருவர்க்கும் அஞ்ச வேணும்; தனியே போனவளுக்கொரு பயமுண்டோ?" என்றருளிச்செய்தார். அதுக்கடி இருவரும் இருவர்க்கும் ஊமத்தங்காயாய், கடித்ததும் ஊர்ந்ததும் அறியார்கள்; இவள் அங்கே புக்கல்லது தரியாள் என்று கருத்து. "அள்ளலம்பூங்கழனி யணியாலி புகுவர் கொலோ! அன்றியே, லங்காத்வாரத்திலே புகுவர்கொலோ!" என்றிறே அங்கு வயிறுபிடி. ஆனாலும், எங்கேனும் போகிலும் இருவராயல்லது இராது அங்கு; "தனியே போன இவளென் படுகிறாளோ?" என்று மிகவும் நொந்து கூப்பிடுகிறாள் இவளுடைய திருத்தாயார்.

விளக்கம் - கடந்த திருவாய்மொழியிலும் தாயாருக்கு துக்கம் உண்டு; அதாவது மகளைப் பிரிந்த துக்கமும், அவள் தனிவழியே சென்ற துக்கமும் ஆகிய இரண்டும்

உள்ளதால், அந்த இரண்டின் பிரிவால் ஏற்பட்ட துக்கத்தைக் கடந்த திருவாய்மொழியில் அருளிச்செய்து, தனிவழி சென்ற துக்கத்தை மறைமுகமாக ஒரு உரையாடல் மூலம் காண்பிக்கிறார். (பெரியதிருமொழியில், பரகாலநாயகியைக் காணாமல், அவளுடைய தாயார், அவளை ஸர்வேச்வரன் திருவாலிக்கு அழைத்துச் சென்றதாக எண்ணுகிறாள். இங்கும் அதே போன்று உள்ளதால், இந்த நிகழ்வைக் கூறுகிறார்) ஸ்வாமி ஆளவந்தார் கோஷ்டியில் இருந்த சிலர், "உண்ணும்சோறு என்பதான திருவாய்மொழியில் உள்ள பிராட்டிக்கோ அல்லது பெரியதிருமொழி (3-7-1) - கள்வன் கொல் - என்பதில் உள்ள பிராட்டிக்கோ, யாருக்கு அதிகம் அஞ்சவேண்டும்?", என்னும் விவாதம் ஏற்பட்டது. இதற்கு ஒரு சிலர் "இருவராகச் சென்றவர்கள் விஷயத்தில், அவ்விதம் அச்சம் ஏற்படவேண்டுமோ; அதாவது 'கள்வன் கொல்' என்பதில் ஸர்வேச்வரனும் பரகாலநாயகியும் என இருவராகச் சென்றார்கள். ஆனால் இங்கு பராங்குசநாயகி தனிவழியே சென்றதால், இவளைக் குறித்து அல்லவோ அச்சம் கொள்ளவேண்டும்?", என்றனர். இதற்கு ஆளவந்தார், "அப்படி அல்ல. இருவராகச் சென்றதால், இருவருக்கும் சேர்த்து அஞ்சவேண்டும். தனித்தனியே சென்றவளுக்கு ஒரு பயம் உண்டோ?", என்று அருளிச்செய்தார். இவ்விதம் கூறுவதற்கு அடிப்படை என்ன? இந்த இருவரும் ஒருவர்க்கொருவர் ஊமத்தங்காய் போன்று இருப்பர்; ஊமத்தங்காயானது தன்னைத் தின்றவர்களுக்கு மயக்கத்தை ஏற்படுவது போன்று இந்த இருவரும் ஒருவருக்கொருவர் தங்களை மறந்து இருப்பர்; ஆகவே தங்களைக் கடிக்கும் பூச்சிகள் குறித்தும், தங்கள் மீது ஊர்ந்து செல்லும் ஸர்ப்பங்கள் குறித்தும் அறியாதபடி இருப்பர். ஆனால் இவள் அது போன்று அல்லாமல், அங்கு செல்வது அல்லாமல் தாங்கமாட்டாள் என்று கருத்து. இருவராகச் சென்றார்கள், அந்த இருவருக்கும் அச்சம் கொள்ளவேண்டும் என்பதை உணர்ந்தும் வாக்கியம், "அள்ளலம்பூங்கழனி யணியாலி புகுவர் கொலோ! அன்றியே, லங்காத்வாரத்திலே புகுவர்கொலோ" என்பதாகும் இங்குள்ள "கொலோ" என்பது, சந்தேகத்தை வெளிப்படுத்தும் அசையாகும். திருவாலி செல்வார்களோ அல்லது இலங்கையின் வாசலில் புகுவர்களோ என்று அல்லவோ இந்தப் பெரியதிருமொழியில் கூறப்பட்ட இடத்திற்கான அச்சத்தின் காரணமாகும். ஆனால் எங்கு சென்றாலும் அங்கு இருவராகவே சென்றனர். "தனித்தையே சென்ற இவள் என்ன துன்பம் அடைகிறாளோ" என்று மிகவும் நொந்து இவளுடைய திருத்தாய் அழைக்கிறாள்.

வ்யாக்யானம் – “அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன்” என்கிறபடியே “பகவத் கோஷ்டிக்கு இனி ஆளாகமாட்டாராகாதே!” என்னும்படி சப்தாதிகளிலே கைகழிந்த இவர், “ஸம்ஸாரிகளுக்கு இனி ஆளாகமாட்டார்” என்னும்படி, நாட்டாரோடு இயல்வொழிந்து, “கொள்ள மாளாவின்ப வெள்ள”த்தைப் புஜிக்கக் கைகழிந்தபடி சொல்லுகிறது. நரகாவஹமான விஷயத்தைப் பற்றிப் பிறர் அறியாமே போகக்கடவ இவர், ஸ்வரூபாநுரூபமான விஷயத்தைப் பற்றிப் பிறர் அறியாமே போம்படியாய் விழுந்தது. க்ஷுத்ர விஷயத்தைப் பற்றிப் பழிக்கஞ்சாதே போகக்கடவவிவர், குணாதிக விஷயத்தைப் பற்றிப் பழிக்கஞ்சாதபடியானார். “என்னுடைமை புக்க விடத்திலே நானும் போய்ப் புக்கல்லது நில்லேன்” என்கிறாள்; “லக்ஷ்மணோ கதாம்கதிம்” என்கிறபடியே.

விளக்கம் – இந்தத் திருவாய்மொழியில், பராங்குச நாயகியானவள் தனது தாயார் முதலான உறவினர்களையும், இன்பம் அளிக்கவல்ல விஷயங்களையும் விட்டுச் சென்றதற்கான ஆழ்பொருளை அடுத்து அருளிச்செய்கிறார். பொதுவாகவே உலக விஷயங்களுடைய அனுபவத்திற்கு “அற்பமானவை, நரகம் கொண்டு செல்லக் கூடியவை மற்றும் தாழ்ந்த குணங்கள் கொண்டவை” என்பதாக மூன்று தோஷங்கள் உள்ளன; இவற்றில் முதன்மையாக உள்ள அற்பத்தன்மையை வ்யாக்யானத்தில் “அற்பசாரங்கள்” என்று தொடங்கி அருளிச்செய்கிறார். திருவாய்மொழி (3-2-6) - அற்ப சாரங்கள் அவை சுவைத்து அகன்று ஒழிந்தேன் – என்பதற்கு ஏற்ப, “பகவத் கோஷ்டியில் இவர் இனி ஆளாகமாட்டார்” என்பதற்கு ஏற்ப, “உலக விஷயங்களிலிருந்து விலகிய இவர், ஸம்ஸாரிகளுக்கு இனி ஆளாகமாட்டார்” என்பதற்கு ஏற்ப, உலகில் உள்ளவர்களுடைய பொதுவான தன்மைகளை விடுத்து, திருவாய்மொழி (4-7-2) - கொள்ள மாளாவின்ப வெள்ளம் – என்பதற்கு ஏற்ப அனுபவிக்க, இவற்றைக் கைகழிந்த விதத்தைக் கூறுகிறார். அந்த உலக விஷயங்கள் அனைத்தும், நரகத்திற்குக் கொண்டு செல்லும் காரணங்கள் ஆகும் என்று உலகில் உள்ள மற்றவர்கள் அறியாமல் உள்ளபோது, இவர் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்றதான பகவத் விஷயத்தைப் பற்றி நின்று, மற்றவர்கள் அறியாமல் போகும்படி, பகவத் விஷயத்தில் விழுந்தார். மற்றவர்கள் அனைவரும் தாழ்ந்த விஷயத்தின் பின்னே பழிக்கு அஞ்சாமல் சென்றபடி உள்ளபோது, இவர் குணத்தில் சிறந்த விஷயத்தைப் பற்றிச் செல்லும்போது, மற்றவர்களுடைய பழிக்கு அஞ்சாதபடி சென்றார். தனது மகளின் நிலையைக் கண்ட தாயார், “எனது மகள்

சென்ற இடத்திற்கு நானும் செல்வது அல்லாமல் நிற்கமாட்டேன்” என்றாள். இதற்கு உதாரணம் கூறுகிறார்; உத்தரராமாயணம் – லக்ஷ்மணே கதாம்கதிம் - இராமன், “நாம் இப்போது லக்ஷ்மணன் சென்ற வழியில் செல்கிறோம் என்று கூறினான்” – என்பது காண்க.

வ்யாக்யானம் – (ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய) தான் பண்டு விரும்பியிருக்குமவற்றோடு பெற்றவர்களோடு வாசியறப் பொகட்டுப் போனாள். (பரித்யஜ்ய) “மீண்டும் இவற்றிலே நகைபண்ணும்” என்று தோற்றாதபடிவிட்டாள். (பர்த்ரு ஸ்நேஹபலாத்க்ருதா) ஒரு விஷயத்தில் ஸ்நேஹமானது எல்லாவற்றையும் விடப்பண்ணுமாகாதே; ஸ்வவசத்தாலே போனாளன்றுகிடீர். (அசிந்தயித்வா து:காநி) விட்டவற்றை நினையாவிட்டால், போய்ப் புக்குகிறவிடத்தில் மிறுக்கைத்தான் நினையாநின்றாளோ? இவள் பெருமாளையொழியத் தன்னைக் காணிலிறே து:காநுஸந்தானம் பண்ணவல்லளாவது. (ப்ரவிஷ்டா நிர்ஜநம் வநம்) “போகத்துக்கு ஏகாந்த ஸ்தலம்” என்னுமதுவேகிடீர் இவள் நெஞ்சில்பட்டது.

விளக்கம் – இந்தப் பெண்ணானவள் தனது தாயார் மற்றும் அனைவரையும் விட்டுச் சென்றதற்கு உதாரணமும், அந்த உதாரண ச்லோகத்திற்கு வ்யாக்யானமும் செய்கிறார். இங்கு ஸுந்தரகாண்டம் (16-19) - ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய பர்த்ரு ஸ்நேஹ பலாத் க்ருதா அசிந்தயித்வா து:காநி ப்ரவிஷ்டா நிர்ஜநம் வநம் - (ஹனுமான் தன்னுடைய மனதில் எண்ணுதல்) இவள் தனது கணவன் மீது உள்ள காதல் பலம் காரணமாக, அனைத்து இன்பங்களையும் துறந்து, வரக்கூடிய துன்பங்களை எண்ணாமல், எந்த மனிதரும் இல்லாத வனத்தில் புகுந்தாள் – என்னும் ச்லோகத்தை வ்யாக்யானம் செய்கிறார். (ஸர்வாந் போகாந் பரித்யஜ்ய) - தான் முன்பு விரும்பியிருந்த வஸ்துக்கள் மற்றும் பெற்றவர்கள் ஆகிய வேறுபாடு காணாமல் அனைத்தையும் விட்டுச் சென்றாள். (பரித்யஜ்ய) - இவற்றில் மீண்டும் ஆசை ஏற்படக்கூடும் என்று இல்லாதபடி விட்டாள். (பர்த்ரு ஸ்நேஹபலாத்க்ருதா) - ஒரு விஷயத்தைக் குறித்து ஏற்படும் பிரியம் என்பது மற்ற அனைத்தையும் விடும்படியாகச் செய்யும் அல்லவோ? இவள் தன் வசத்தால் செல்லவில்லை. (அசிந்தயித்வா து:காநி) - தான் விட்டுச் சென்றவற்றை எண்ணாமல் இருந்தாலும், சென்ற சேர்ந்த இடத்தில் உள்ள துன்பங்களை எண்ணாமல் இருந்தாளோ? இவள் அவனைத் தவிர தன்னைக் கண்டால் அல்லவோ தனது துக்கம் குறித்து

எண்ணுவாள்? (ப்ரவிஷ்டா நிர்ஜநம் வநம்) - இன்பத்திற்கு ஏகாந்தமான இடம் என்ற ஒரு விஷயம் மட்டும் இவள் கண்களில் புலப்பட்டது.

வ்யாக்யானம் - (புத்ர த்வய விஹீநம் தத்) சக்ரவர்த்தி, பிள்ளைகளிருவரையும் தேடிப் போர நொந்தான். (ஸ்நுஷயாச விவர்ஜிதம்) "மீண்டும் இவ்விடத்தை விரும்புவர்கள்" என்று நினையாதபடி குழை சரக்கறுத்துக் கொண்டு போனபடி. (அபஜ்யத் பவநம்ராஜா நஷ்ட சந்த்ரமிவாம்பரம்) நிலவோடும் நக்ஷத்திர தாரா கணங்களோடுங்கூட சந்த்ரன் குடிவாங்கின ஆகாசம்போலே கிடந்தது. அப்படியேயாயிற்று இத்திருமாளிகை கிடக்கிறது. "நல்லதோர் தாமரைப்பொய்கை" இத்யாதிப்படியேயாயிற்று இவள் திருமாளிகை கிடக்கிறது.

விளக்கம் - மகள் புறப்பட்டுச் சென்ற பின்னர் அவள் இருந்த வீடு இருந்த நிலைக்கு ஒரு உதாரணமும், அதற்கான ச்லோகத்தையும் கூறுகிறார்; அயோத்யாகாண்டம் (42-31) – புத்ர த்வய வீஹீனம் ச ஸ்நுஷயாபி விவர்ஜிதம் | அபச்யத் பவனம் ராஜா நஷ்ட சந்த்ரமிவாம்பரம் – தனது இரண்டு புத்திரர்களும் மருமகள்களும் இல்லாததும் ஆகிய அந்த வீட்டை தசரதர் பார்த்தார். அது நிலவை இழந்த ஆகாயம் போன்று இருந்தது - என்ற ச்லோகத்தை வ்யாக்யானம் செய்கிறார். (புத்ர த்வய விஹீநம் தத்) - சக்ரவர்த்தி தனது இரண்டு புத்திரர்களையும் தேடிச் சென்று நொந்தார். (ஸ்நுஷயாச விவர்ஜிதம்) - இவர்கள் மீண்டும் இந்த இடத்தை விரும்புவார்கள் என்று எண்ணாமல், பாதுகாக்கப்பட வேண்டிய அனைவரையும் அழைத்துச் சென்றான். (அபஜ்யத் பவநம்ராஜா நஷ்ட சந்த்ரமிவாம்பரம்) - நிலவாகிய ஸீதை, நக்ஷத்ர தார கணங்களாகிய லக்ஷ்மணன் மற்றும் சந்த்ரனாகிய இராமன் இல்லாத ஆகாசம் போன்று அந்த மாளிகை கிடந்தது. அது போன்றே இந்தப் பெண்பிள்ளையுடையவீடும் உள்ளது. மற்றும் ஒரு உதாரணம் கூறுகிறார். பெரியாழ்வார் திருமொழி (3-8-1) - நல்லதோர் தாமரைப்பொய்கை - நல்ல தாமரை பொய்கை மீது படர்ந்த பனி காரணமாக அனைத்தும் வாடின - என்பதாக இருந்தது.

வ்யாக்யானம் - திருத்தாயாரும் இம்மாளிகையைக் கண்டு வெறுத்து, "போகக் கடவதாகத் துணிந்தால் என்னையுங் கூட்டிக்கொண்டு போனாலாகாதோ? தனிவழியே போவதே! நான் கூடப்போகாவிட்டாலவனுடனே கூடப்போகவும் பெற்றாதொழிவதே! இவள் தான் எங்ஙனே போகிறாளோ! நாட்டங்க வாழ்வித்துக் கொண்டு போகிறாளோ! அங்கே புக்காலென் படுகிறாளோ! வழியிலுள்ளார் என்

சொல்லுகிறார்களோ! அங்கே புக்கால் அவ்வூரிற் சோலைகளையும் அங்குள்ள நீர்நிலைகளையும் அவன் குணங்களையுங் கண்டு உகக்கிறாளோ! கண்டு சிதிலையாகிறாளோ! இதெல்லாம் தான் அங்கே சென்று புக்காலிறே! என்றாற்போலே மநோரதித்துக் கொண்டு, தன்னைப் பார்த்தல் எங்களைப் பார்த்தல் செய்யாதே, இத்தையெல்லாம் கடலிலே கவிழ்த்துப்போவதே!" என்று திருத்தாயார் இன்னாதாகிறாள்.

விளக்கம் – திருத்தாயாரும், இந்த வீடு உள்ள நிலையைக் கண்டு மனம் வெறுத்து, "போகக்கடவது என்று துணிந்த பின்னர் என்னையும் உடன் அழைத்துச் சென்றிருக்கலாம் அல்லவோ? தனியாக ஏன் செல்லவேண்டும்? நான் உடன் செல்லவில்லை என்றாலும் அவளுடன் சேர்ந்து செல்லவும் இல்லையே! இவள்தான் எப்படிச் செல்கிறாளோ? நாடு முழுவதும் வாழ்வித்தப்படி செல்கிறாள். அங்கு சென்று என்ன பாடுபடுகிறாளோ? வழியில் உள்ளவர்கள் என்ன கூறுகிறார்களோ? அங்கு சென்ற பின்னர் அந்த ஊரில் உள்ள சோலைகளையும், அங்குள்ள நீர் நிலைகளையும், அவனுடைய குணங்களையும் கண்டு மகிழ்ந்தபடி உள்ளாளோ? அவற்றைக் கண்டு உருக்குலைந்து போகிறாளோ? இவை அனைத்தும் நான் அங்கு சென்று புகுந்தால் அல்லவோ அறியமுடியும்?", என்று பலவிதமாகச் சிந்தித்தாள். இந்தப் பெண்பிள்ளை தன்னுடைய பெண்மைத்தன்மை மற்றும் இவளுடைய பிரிவால் நாங்கள் அடையும் துன்பம் ஆகியவற்றைப் பார்க்காமல், இவை அனைத்தையும் கடலில் கழிப்பது போன்று செய்து செல்வது ஏன் என்று தாயார் தவிக்கிறாள்.

6-7-1. உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்று என்றே கண்கள் நீர் மல்கி
மண்ணினுள் அவன்சீர் வளம் மிக்க அவன் ஊர் வினவி
திண்ணம் என் இளமான் புகும் ஊர் திருக்கோளூரே

பொருள் – "உயிர் தாங்கி நிற்பதற்கு உட்கொள்ள வேண்டும்படியாக உள்ள சோறும், தாகம் எடுத்தால் பருகவேண்டும்படியாக உள்ள தண்ணீரும், ப்ரீதிக்குக் காரணமாக உள்ளதால் இன்பம் அளிக்க தின்னும்படி உள்ள வெற்றிலையும் என்று இப்படியாக உயிர் தாங்கி நிற்பது போன்ற பலவற்றுக்கும் காரணமாக உள்ள அனைத்து வஸ்துக்களும் வஸுதேவருடைய புத்திரனாகிய க்ருஷ்ணனும், எனக்கு ஸ்வாமியும் ஆகிய அவனே ஆவான்", என்று பலமுறை எண்ணியபடி உள்ளாள்.

அவன் அருகில் இல்லாமையால் கண்கள் நீர் நிறைந்து, தனது அடியார்களுக்கு அருகில் இருக்கவேண்டும் என்று என்ணியபடி அவன் வந்த பூமியில், அவனுடைய ஸௌலப்யம் ஸௌந்தர்யம் சௌசீல்யம் போன்ற பல திருக்கல்யாண குணங்களையும்; தான் தனது அடியார்களிடம் உள்ள காதல் மிகுதியால் பரிபூர்ணமாக உள்ளவனுடைய ஊரையும் குறித்து எண்ணி, எனது மகள் அங்கு செல்கிறாள். இவ்விதம் தான் மட்டும் அவனை எண்ணியபடி இராமல், தான் அவனிடம் காதல் வசப்பட்ட காரணத்தால், தனது அருகில் வரும் அனைவரையும் வினவியபடி, அவர்களைத் தனது வழிக்கு ஆதரவாகக் கொண்டு, பெண்பிள்ளையாக இருந்தாலும் மான் போன்ற பேதைப்பருவம் கொண்ட எனது பெண்பிள்ளை, வேறு ஒரு இடத்திற்குத் தூரமாகச் செல்லவல்லவள் அல்லள். ஆகவே அவள் சென்று சேர்ந்திருக்கும் இடமானது நிச்சயமாக திருக்கோளூரே ஆகும்.

அவதாரிகை – தன் வயிற்றிற் பிறப்பாலும், இவள் தன் ஸ்வபாவத்தாலும் இவள் இங்குநின்றும் போய்ப்புகும் ஊர் திருக்கோளூர் என்றத்யவஸிக்கிறாள்.

விளக்கம் – தனது வயிற்றில் பிறந்த காரணத்தாலும், இந்தப் பெண்பிள்ளையின் இயல்பு காரணத்தாலும், அவள் இங்கிருந்து புறப்பட்டுச் சென்று சேரும் ஊர் திருக்கோளூரே ஆகும் என்று உறுதியாகக் கூறுகிறாள்.

வ்யாக்யானம் - (உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன்) இவள் அவ்வருகே ஒருவாய்ப்புகுநீர் தேடிப்போனாளே. இங்கிருந்த நாள் அந்நபநாதிகளாலே தரித்து, அங்கே புக்கு அவனாலே தரிக்கப் போனாளோ. “அஹமந்நம் - அஹமந்நாத:” என்றிருப்பார்க்கும் அவ்வருகு போகவேணுமோ? “சோறு, தண்ணீர், வெற்றிலை” என்னவமையாதோ? “‘உண்ணுஞ்சோறு” என்றாப் போலேயிருக்கிற விசேஷணங்களுக்குக் கருத்தென்? என்னில்; “வேட்ட பொழுதிலவையவை போலுமே தோட்டார் கதுப்பினாடோள்” சொன்னானிறே; அப்படியே, இவைதானே அநபிதமுமாயிருக்கும் ஓரோ அவஸ்த்தைகளிலே. அதுக்காக அபிமத ஸமயத்தில் இவைதான் யாதொருபடியிருக்கும் அப்படியேயாயிற்று இவர்க்கு எப்போதும் பகவத் விஷயமென்கைக்காக, தாரக போஷக போக்யங்களெல்லாம்.

விளக்கம் – (உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்) – இவள், உச்சி முதல் ஓர் அனுபவம் கிட்டுவதற்காக, இங்கிருந்து அங்கு சென்றாளோ? இங்கு இவள் இருந்த நாட்களில் உணவு போன்றவற்றால் உயிர் தாங்கி நின்றவள், அங்கு அவனையே தனது உயிர் தாங்கும்விதமாக எண்ணிச் சென்றாளோ? ச்ருதியில், "அஹமந்நம் - அஹமந்நாத: - நான் அவனுக்கு இனியவன், நான் அவனுடைய இனிமையை அனுபவிப்பவன்" என்று கூறுவது போன்று உள்ளவர்களும் கூட அங்கு செல்ல வேண்டுமோ? அடுத்து, "சோறு, நீர், வெற்றிலை" என்று கூறினால் போதாதோ? "உண்ணும் சோறு" என்பது போன்ற அடைமொழிகள் கூறுவதன் கருத்து என்ன என்பதற்கு விடை அளிக்கிறார்; திருக்குறள் (1105) - வேட்ட பொழுதின் அவையவை போலுமே தோட்டார் கதுப்பினாள் தோள் - விரும்பிய பொருள்களைப் பெறும்போது கிடைக்கும் இன்பம் போலவே, மலர் சூடிய கூந்தலை உடைய இவளுடைய தோள்கள், விரும்பிய நேரத்தில் இன்பம் தருகின்றன – என்பதாக திருவள்ளுவரும் கூறினார்; அதாவது இவை அனைத்தும் ஒரு சில நிலைகளில் விருப்பம் அற்றவையாகக் கூட இருக்கும். ஆகவே இவருக்கு பகவத் விஷயம் உள்ளது போன்று, இவை எப்போது விரும்பப்படுமோ அந்த நேரத்தில் இனிமையாக உள்ளது போன்று, இவருக்கும் எப்போதுமே இனிமையாக உள்ளது என்று கருத்து.

வ்யாக்யானம் - (எல்லாம் கண்ணன்) "வாஸுதேவஸ்ஸர்வம்" என்று கொண்டு எல்லாம் க்ருஷ்ணன் என்றிருக்குமத்தனை. உண்ணுஞ்சோறென்கையாலே அல்லாதது உண்டு சமையும் சோறென்கையும், இது மாறாதே புஜிக்கும் சோறென்னுமதுவும் தோற்றுகிறது. "கணை நாணிலோவாத் தொழில் சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே, யோவாதவூணாக வுண்" என்னக்கடவதிறே. மாறாதே புஜிக்கலாவதும், மாளாததும் இதிறே; "அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதம்" என்றும், "கொள்ளமாளாவின்ப வெள்ளம்" என்றுமிறேயிருப்பது.

விளக்கம் – (எல்லாம் கண்ணன்) - கீதை (7-19) – வாஸுதேவ: ஸர்வம் - அனைத்தும் வாஸுதேவனே – என்பதால், அனைத்தும் க்ருஷ்ணனாகவே இவருக்கு உள்ளது. "உண்ணும் சோறு" என்று நிகழ்காலத்தில் கூறப்படுவது காண்க; அதாவது, மற்ற சோறு அனைத்தும், உட்கொண்டால் தீர்ந்து விடும் தன்மை மற்றும் திகட்டும் தன்மை கொண்டவை; ஆனால் இது மாறாமல்

உண்ணப்படும் சோறு என்பது புலப்படுகிறது; அதாவது, இங்கு "மாறாமல் உண்ணப்படும் சோறு" என்பது பகவத் அனுபவம் ஆகும். ஆனால் பகவத் அனுபவம் என்பது இவ்விதம் உள்ள சோறாக இருக்குமோ என்பதற்கு ப்ரமாணம் பெரியதிருவந்தாதி (78) - கணை நாணிலோவாத் தொழில் சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே, யோவாத ஊணாக உண் – என்பதாகும்; இப்படியாக இது தீராமலும், திகட்டாமலும் இருப்பதாகும். இதற்கு மேலும் ப்ரமாணம் திருவாய்மொழி (2-5-4) - அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதம் – என்றும், திருவாய்மொழி (4-7-2) - கொள்ளமாளாவின்ப வெள்ளம் - என்றும் உள்ளது காண்க.

வ்யாக்யானம் - (எம்பெருமான்) இவற்றிலாகாததொன்றில்லைகிடீர், இவையெல்லாம் வகுத்து அவனேயாயிருக்கை. இவள் ஸந்நிதியேயமையுங்கிடீர் எங்களுக்கு. (என்றென்றே) இதொழிய வேறொன்றை "தாரகம்" என்றிருக்கில் இறே மற்றொன்றைச் சொல்லுவது, இது தன்னையே மாறாதே சொல்லி, ஒருகால் இத்தைச் சொல்லிப் பின்பு ஊணுறக்கத்தாலே போதுபோக்கலாம் விஷயமன்றே.

விளக்கம் – (எம்பெருமான்) – "எல்லாம் கண்ணன்" என்று கூறுவதைத் தொடர்ந்து "எம்பெருமான்" என்று கூறுவதன் கருத்து என்ன என்பதைக் கூறுகிறார். இவன் அடையப்படவேண்டிய விஷயம் என்று கூறுகிறார்; இந்த வஸ்துக்களில் ஆகாதது என்று ஏதும் இல்லை, காரணம் இவை அனைத்திற்கும் இயல்பாகவே அவனே அனைத்துமாக உள்ளான். இவ்விதம் "எல்லாம் கண்ணன்" என்று கூறுபவள், எங்கள் அருகில் இருந்தாலே போதுமானது. (என்று என்றே) - இது தவிர்த்து வேறு ஏதேனும் ஒன்று "நம்முடைய உயிரைத் தாங்க உதவும் பொருள்" என்று இருந்தால் அல்லவோ, இவற்றை விடுத்து, அந்த வேறு ஒன்றைக் கூற முடியும்! ஒருமுறை இந்த விஷயத்தைக் கூறிய பின்னர், இதனை விடுத்து, உணவு உட்கொள்ளுதல் மற்றும் உறக்கம் என்பதாகப் பொழுது போக்கலாம் என்னும்படி உள்ள விஷயம் இது அல்லவோ?

வ்யாக்யானம் - (கண்கள் நீர்கள் மல்கி) இவர்களுடைய உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாமிருக்கிறபடி. இவள் முகத்தாலேகாணும் இவர்களுக்கு ஜீவநம். தன் ஜீவநத்துக்குப் போகிறவள் எங்கள் ஜீவநத்தைக் கொண்டு போக வேணுமோ? ஒருவன் பகவத்குண வித்தனாய்க் கண்ணுங் கண்ணநீருமாயிருக்க, அவனைக் கண்டு கொண்டிருக்கவாகாதேயடுப்பது. "அழுநீர் துளும்ப வலமருகின்றன வாழியரோ" என்று சேதநராகில் மங்களாசாஸநம்

பண்ணக்கடவது. நஞ்சீயர், “பிள்ளை திருநறையூரரையரோடே மூன்று திருவாய்மொழி கேட்டேன், அதில் எனக்கொரு வார்த்தைகளும் போகாது; ஒரு திருவாய்மொழியை ப்ரஸ்தாவியா அவர் சிதிலராய்க் கண்ணுங்கண்ணநீருமாய் இருக்குமிருப்பை நினைத்திருப்பன்” என்று அருளிச்செய்வர். (ஆஹ்லாத சீத நேத்ராம்பு:) விரஹத்தாலே கொதித்துப் புறப்படும் சோகாச்ரு போலன்றிக்கே, பகவதநுபவ ஜநிதமான ஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே குளிர்ந்த கண்ணீரையுடையனாவது. (புலகீக்ருத காத்ரவாந்) உடம்படைய மயிரெறிந்திருப்பது. (பரகுணாவிஷ்ட:) பகவத்குணா விஷ்டனாவது, தைவாவிஷ்டரைப்போலே. அவன், (ஸர்வதேஹிபி: - த்ரஷ்டவ்ய:) அவன் தேஹ பரிக்ரஹம் பண்ணினார் எல்லார்க்கும் த்ரஷ்டவ்யன். தேஹபரிக்ரஹம் பண்ணினதுக்கு ப்ரயோஜநம் இவனைக் காண்கையாயிற்று. (ஸதா - த்ரஷ்டவ்ய:) ஸதா தர்சநம் பண்ணுகைக்கு ஒரு தேசவிசேஷம் தேடிப்போக வேணுமோ?

விளக்கம் – (கண்கள் நீர்கள் மல்கி) – இவள் “மயர்வற மதிநலம் அருளப் பெற்று”, அதன் விளைவாக இந்த ஜகத் முழுவதையும் திருத்துவதால், இவள் திருத்தியதன் மூலம் திருந்திய அனைத்தும், இவளுடைய கண்ணும் கண்ணீருமாக உள்ள இருப்பு என்பதையே, தாங்கள் உயிர் வாழ்தல் மற்றும் இனிமை என்பதற்குக் காரணமாக எண்ணியபடி இருப்பர்; ஆகவே இவருடைய இந்த நிலையே இவர்களுக்கு “உண்ணும் சோறு, பருகும் நீர் மற்றும் தின்னும் வெற்றிலை” ஆகிய அனைத்துமாக உள்ளது. இவள் முகத்தின் மூலம் இவர்களுக்கு வாழ்வு நிலைக்கிறது. இவள் கண்ணும் கண்ணீருமாக தங்களுடன் இருந்த இருப்பை இழந்த தாயாருடைய மனநிலையைக் கூறுகிறார். தனது உயிர் நிலைப்பதற்காகச் செல்பவள், எங்கள் உயிரைக் கொண்டு செல்லவேண்டுமோ? ஒருவன் பகவத் குணங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவனாக, கண்ணும் கண்ணீருமாக நின்றால், அவனைப் பார்த்தபடி இருப்பது அல்லவோ ஏற்றது? அவனைப் பார்த்தபடி இருப்பதுடன் மட்டும் அல்லாமல், அவனை வாழ்த்தவும் வேண்டும் என்கிறார்; திருவிருத்தம் (2) - அழுநீர் துளும்ப வலமருகின்றன வாழியரோ - என்பது காண்க. பகவத் விஷயம் காரணமாக ஒருவன் கண்ணும் கண்ணீருமாக உள்ள நிலையைக் காண்பதே உயர்ந்த புருஷார்த்தம் என்பதற்கு ஒரு நிகழ்வைக் கூறுகிறார். நஞ்சீயர், “நான், பிள்ளைதிருநறையூர்அரையர் கூறும் திருவாய்மொழிகள் மூன்றைக் கேட்டபடி இருந்தேன். அவற்றை இப்போது நான் கூற இயலாது. ஆனால் ஒரு திருவாய்மொழியைக் கூறியவுடன் அவர் உருக்குலைந்து கண்ணும் கண்ணீருமாக நின்ற நிலையை நான் இப்போதும் நினைத்தபடி உள்ளேன்”, என்றார். இதற்கு

விஷ்ணு தத்வத்திலிருந்து ப்ரமாணம் காண்பிக்கிறார். (ஆஹ்லாத சீத நேத்ராம்பு:) - விரஹத்தால் கொதித்து வெளிப்படும் துக்கம் நிறைந்த கண்ணீர் போன்று அல்லாமல், பகவத் அனுபவம் காரணமாக உண்டான மகிழ்ச்சியினால் வெளிப்படும் குளிர்ந்த கண்ணீர் கொண்டவனாக இருப்பது, (புலகீக்ருத காத்ரவாந்) – பகவத் விஷயம் காரணமாகச் சரீரம் முழுவதும் மயிர்கூச்சல் எடுத்தபடி இருப்பது. (பரகுணாவிஷ்ட:) – பகவத் குணங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருத்தல் என்பது தெய்வம் ஆவேசிப்பது போன்று இருப்பது; இப்படிப்பட்டவன் (ஸர்வதேஹிபி: - த்ரஷ்டவ்ய:) - சரீரம் எடுத்தவர்கள் அனைவராலும் காணத்தக்கவன் ஆகிறான். சரீரம் எடுத்ததன் பயன் என்பது இப்படிப்பட்டவனைக் காண்பது ஆகும். (ஸதா - த்ரஷ்டவ்ய:) - ஸர்வேச்வரனை எப்போதும் காண்பதற்காகப் பரமபதம் தேடிச் செல்லவேண்டுமோ? இவனைக் காண்பதே போதுமானது ஆகிறது.

வ்யாக்யானம் - அநந்தாழ்வான் சோழகுலாந்தகனிலே க்ருஷி பண்ணியிருக்கிறானொரு ஸ்ரீவைஷ்ணவனைக் கண்டு, "உம்முடைய ஊர் எது?" என்று கேட்க, "என் ஊர் திருக்கோளூர்" என்ன, "அங்குநின்றும் போந்ததென்?" என்ன, "தேஹயாத்ரை நடவாமே போந்தேன்" என்ன, "அவ்வூரில் கழுதையை மேய்த்து ஜீவிக்கமாட்டிற்றிலையோ? நிலைநின்ற ஜீவனத்தை விட்டுப் போந்தாயாகாதே!" என்றானாம்.

விளக்கம் – உயிர் தரிப்பது போன்ற அனைத்து ஈச்வரனாகவே இருக்கும் என்பதற்கு ஒரு நிகழ்வைக் கூறுகிறார். சோழகுலாந்தகன் என்னும் கிராமத்தில் பயிர்த்தொழில் செய்து கொண்டிருந்த ஒரு ஸ்ரீவைஷ்ணன்வனிடம் அநந்தாழ்வான், "உம்முடைய ஊர் எது?", என்றார்; அதற்கு அவன், "எனது ஊர் திருக்கோளூர் ஆகும்" என்றான்; உடனே அவர், "அங்கிருந்து இங்கு வந்தது ஏன்?", என்றார்; இதற்கு அவன், "அங்கு எனது வாழ்க்கை சரிவர நடக்காமல் இருந்ததால் இங்கு வந்தேன்", என்றான்; உடனே இவர், "அந்த ஊரில் ஒரு கழுதையை மேய்த்து உயிர் வாழ இயலாதா? ஆத்மாவிற்கு நிலையான நிலை அளிக்கவல்ல இடத்தை விட்டு இங்கு வந்தாயோ?", என்றார்.

வ்யாக்யானம் - (கண்ணனெம் பெருமானென்றென்றே கண்கள் நீர்கள் மல்கி) இந்த பாவநாப்ரகர்ஷத்தாலே பெற்றாற்போலேயிருந்து ஆநந்தாச்ரு புறப்படுகிறபடி யாகவுமாம்; இவ்வநுஸந்தாநத்தாலே கண்ணீர் மல்கி என்னவுமாம். (மண்ணினுள் இத்யாதி) மண்ணினுள் புகுமூர் திருக்கோளூரே. விண்ணில் ஓரூர் விசேஷிக்க வேண்டும்படியாயிராதிறே. (அவன் சீர்வளம் மிக்கவனூர்) அவனுடைய கல்யாண குணங்களையும் நிரவதிக ஸம்பத்தையுடையவனுடைய வூரையும். "ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹப்ரஹ்மணா" என்று அவனோடு அவன் குணங்களோடு வாசியற ப்ராப்யமாகிறவோபாதி அவன் விரும்பின தேசமும் ப்ராப்யாந்தர்க்கதமாகக் கடவதிறே.

விளக்கம் – (கண்ணன் எம்பெருமான் என்று என்றே கண்கள் நீர்கள் மல்கி) - இங்கு கூறப்படும் கண்ணீரானது ஆனந்தக்கண்ணீர் என்பதாகக் கொண்டு, பிரிந்துள்ள நிலையில் ஆனந்தக்கண்ணீர் வருவதற்கான வாய்ப்பு இல்லையே என்று கேட்கலாம். இதற்கு விடை அளிக்கிறார். இத்தகைய பாவனையின் மிகுதி காரணமாக, பெற்றது போன்று விளங்கி, அதன் காரணமாக ஆனந்தக்கண்ணீர் பெருகுகிறது எனலாம்; அல்லது பிரிந்து சென்ற நிலையில், நினைவுகள் ஏற்பட்டபடி உள்ளதால் சோகக் கண்ணீர் பெருகுகிறது என்றும் கூறலாம். (மண்ணினுள் இத்யாதி) – "மண்ணினுள் புகுந்த ஊர்" என்று ஏன் சிறப்பித்துக் கூறினார்? பரமபதம் போன்ற மேலே உள்ள லோகங்கள் அனைத்தும் இவனுக்கு வசப்பட்டு உள்ளதால் அவற்றைச் சிறப்பித்துக் கூறவேண்டிய அவசியம் இல்லை; ஆனால் இங்கு அனைத்தும் அவ்விதம் இல்லாமையால் கூறுகிறார். (அவன் சீர்வளம் மிக்கவனூர்) - அவனுடைய திருக்கல்யாண குணங்கள் மற்றும் தன்னை காட்டிலும் அதிகமாக வேறு ஒன்றும் இல்லை என்னும்படியான செல்வம் கொண்ட ஊர் ஆகியவற்றை. அவன் குணங்கள் போன்று அவனுடைய ஊரும் அடையத்தக்கதாக இருக்குமோ என்பதற்கு விடை அளிக்கிறார்; உபநிஷத்தில் – ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹப்ரஹ்மணா - முக்தாத்மா தனது அனைத்து விருப்பங்களையும் ப்ரஹ்மத்துடன் சேர்ந்து அனுபவிக்கிறான் - என்பதற்கு ஏற்ப, அவன் மற்றும் அவனுடைய குணங்கள் ஆகிய இரண்டும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி அடையத்தக்கதாக உள்ளது போன்று, அவன் விரும்பி வசிக்கின்ற இடமும் அடையத்தக்க ஒன்றாகிறது.

வ்யாக்யானம் - (அவன் சீர்) அவன் கல்யாணகுணங்கள். அவையாகிறன, அவன் தன் திறத்தில் தாழ நிற்கும் நிலைகள். (வளம் மிக்கவனூர்) பரமபதம் கலவிருக்கையோபாதி உகந்த விஷயத்தைப் பெறும் இடமிறே ஊராகிறது! "கிம்

கார்யம் ஸீதயாமம"விறே. பரமபதத்திற்காட்டிலும் ஆச்ரிதர் இருந்த இடமிறே ஊராகிறதும், அவன் திருவுள்ளத்துக்குப் பொருந்தியிருப்பதும். (வளம் மிக்கவன்) ப்ரணயதாரையில் விதக்தன் என்றுமாம். இப்போது வைதக்த்யமாவது தானிருந்தவிடத்தே இவள் வரும்படி இத்தலையை யழித்தபடி.

விளக்கம் – (அவன் சீர்) - அவனுடைய திருக்கல்யாணகுணங்கள். இந்தக் குணங்களில் இவளுக்குச் சிறப்பாக தென்பட்டவை எவை என்பதற்கு விடை அளிக்கிறார். அவன் தனது நிலையிலிருந்து இரங்கி வந்து நிற்கும் நிலை ஆகும். (வளம் மிக்கவனூர்) - பரமபதத்தின் சபையில் வீற்றிருப்பது போன்று, தனக்கு விருப்பமானவற்றை அடையும் இடமாக உள்ளதே இந்த ஊர் என்றாகிறது. ஆனால் இவ்விதம் இவன் உகந்த விஷயம் பரமபதத்தில் ஏதும் இல்லையோ என்பதற்கு விடை அளிக்கிறார்; யுத்தகாண்டம் (41-1) – கிம் கார்யம் ஸீதயாமம - எனக்கு சீதையால் என்ன கார்யம் உள்ளது - என்பது போன்றே ஆகிறது. அதாவது அங்கு அவனை அண்டி நிற்பவர்களைக் காட்டிலும், இங்கு இவனை அண்டி நிற்பவர்களே, இவனுக்கு உகந்ததாகிறது. பரமபதத்தைக் காட்டிலும் இவனுடைய அடியார்கள் உள்ள இடம் அல்லவோ ஊர் என்பதாகும். அவன் திருவுள்ளத்திற்குப் பொருந்தி இருப்பதாகவும் இருக்கிறது. (வளம் மிக்கவன்) - "வளம்" என்பதற்கு, முன்னர் "செல்வம்" என்ற பொருள் கொண்டு வ்யாக்யானம் செய்தார்; இங்கு, "சாமர்த்யம்" என்ற பொருள் கொண்டு கூறுகிறார்; ப்ரளய நிலையில் சாமர்த்தியம் கொண்டவன். இங்கு சாமர்த்தியம் என்பது, இந்தப் பெண்பிள்ளையைத் தனது இடத்திற்கு வரும்படியாகச் செய்து, இவளை அழித்தது ஆகும்.

வ்யாக்யானம் - (வினவி) "திருக்கோளூரெத்தனையிடம் போரும்" என்று எதிரே வந்தாரைக் கேட்டு, அவர்கள் "இத்தனையிடம் போரும்" என்ன, அதுதானே வழிக்கு பாதேயமாகப் போகை. "பாதேயம் புண்டரீகாக்ஷ" இத்யாதி. பூவலரும்போதைச் செவ்விபோலே "திருக்கோளூரெத்தனையிடம் போரும்" என்று கேட்கும் போதைத் திருப்பவளத்தில் செவ்வி காணப்பெற்றிலேன் என்று காணும் திருத்தாயார்தான் நோவுபடுகிறது. (என் இளமான் புகுமூர் திருக்கோளூரே) என் வயிற்றிற் பிறப்பாலும், இவள் ப்ரக்ருதியாலும் அவ்வூரிலல்லது புகாள் என்கிறாளாயிற்று. தாய் வழி கொண்டே ஸ்வபாவங்கள் அறுயிதிடலாமாகாதே. பெருமாளைக் கண்டல்லது தரிக்க மாட்டாதானாய் வருகிற ஸ்ரீபரதாழ்வானைக் கண்டு வைத்தேயும், த்ரிகாலஜ்ஞனான ருஷியுங்கூட, "கச்சிந்த துஷ்டோ வ்ரஜஸி" என்று தாயாரையிட்டு வழக்குப் பேசுவித்துக் கொண்டு இவரைக் காடேறப்

போகவிட்டாயாகில், இன்னம் “பெருமாள் இருக்கில் கீழ்வயிற்றில் கழலையாகிறது” என்று அங்குப்போய் நலியத் தேடுகிறாயல்லையிறே என்றானிறே; அவன்படிகள் காணாநிற்கச்செய்தேயும் மாத்ரு ஸம்பந்தம் கொண்டு சங்கித்தானிறே; பதார்த்த ஸ்வபாவங்களைக் கொண்டு பத்தும்பத்தாக நிமித்தங்களை யறியக்கடவரா யிருப்பர்களாயிற்று வேடர்; இங்ஙனே யிருக்கச்செய்தேயும், தம் எல்லையிலே இவன் வந்து புகுந்ததுக்கு ஹ்ருஷ்டராய், “அடிச்சேரியிலே வந்து புகுவதே!” என்பது; “ஆனாலும், ராஜாக்களாயிருப்பார் வன்னியர் பற்றிலே புகுரும்போது கேள்வி கொண்டன்றோ புகுருவது” என்றாற்போலேயிருக்க வெளிரும் காழ்ப்புமாகச் சொல்லி, தாய் வழியை நினைத்து அசிர்த்தாறிறே ஸ்ரீகுகப்பெருமாளும். அப்படியே இவளும் தன் வயிற்றிற் பிறந்த சுத்தியே ஹேதுவாக “திருக்கோளூரிலே புகும்” என்றறுதியிடுகிறாள். ராமாஸ்த்ரம் இலக்குத் தப்புமோ! என் மகள் புகுமூர் அதுவேயென்கிறாள்.

விளக்கம் – (வினவி) - திருத்தாயார் செல்வது திருக்கோளூர் என்னும்போது, வெறுமனே செல்லாமல், வழியில் வினவியபடி செல்வது ஏன் என்பதற்கு விடை அளிக்கிறார்; தனக்கு எதிரில் வருபவர்களிடம், “திருக்கோளூர் எங்கு உள்ளது?”, என்று கேட்டபடி செல்ல, அவர்களும் “இங்கு உள்ளது” என்று அவ்விதம் கூறியபடி செல்லும் நிலையானது, வழிக்கு உணவு போன்று உள்ளது. அவ்விதம் வழிக்கு உணவாக இருப்பதற்கு ப்ரமாணம் காண்பிக்கிறார்; “பாதேயம் புண்டரீகாக்ஷ – தாமரை போன்ற திருக்கண்கள் கொண்டவனுடைய திருநாமங்களே, வழிக்குக் கட்டுச்சோறாக உள்ளது”, என்பது காண்க. ஒரு மலரானது மலரும்போது உள்ள அழகு போன்று, அவள் “திருக்கோளூர் எங்கு உள்ளது?” என்று கெட்டபடி முன்னர் சென்றபோது, அவளுடைய உதடுகளில் மலர்ச்சி காணப்படுவதை நான் காண இயலவில்லை என்று வருந்தும் அளவிற்குத் திருத்தாயார் உள்ளாள். (என் இளமான் புகுமூர் திருக்கோளூரே) – ஆனால் இந்தப் பெண்பிள்ளை, திருக்கோளூர்தான் சென்றிருப்பாள் என்று தாயார் எவ்விதம் அறிந்தாள் என்பதற்கு விடை அளிக்கிறார்; “எனது வயிற்றில் பிறந்த பிறப்பு காரணமாகவும், அவளுடைய ‘உண்ணும் சோறு முதலானவை எல்லாம் கண்ணன்’ என்றுள்ள இயல்பு காரணமாகவும், எனது பெண்பிள்ளையானவள், திருக்கோளூர் அல்லாமல் வேறு எங்கும் சென்றிருக்கமாட்டாள்”, என்கிறாள். தனது வயிற்றில் பிறந்து காரணத்தால் அங்குதான் சென்றிருப்பாள் என்று எப்படி நிச்சயித்தான் என்பதற்கு விடை கூறுகிறார். ஒரு தாய் மூலமாகவே, அவள் வயிற்றில் பிறந்தவர்களுடைய

இயல்புகளை உறுதியாகக் கூறலாம் அல்லவோ? அவ்விதம் யாரேனும் உறுதியாகக் கூறினார்களோ என்பதற்கு ப்ரமாணம் கூறுகிறார்; இராமனைக் கண்டால் அல்லாமல் உயிர் தாங்கி நிற்க இயலாமல் ஓடி வரும் பரதாழ்வானைக் கண்டவுடன், அயோத்யாகாண்டம் (58-7) - கச்சிந்ந துஷ்டோ வ்ரஜஸி – தாங்கள் இராமனுக்குத் தீங்கிழைக்கப் போவதில்லை என்று நான் எண்ணுகிறேன் - என்று குஹன் பரதனிடம் கூறியது காண்க. இது குகன் பரதாழ்வாரிடம் கூறினாலும், இங்கு பரத்வாஜ முனிவருக்கும் இதே கருத்து இருந்தமையால், “மூன்று காலமும் அறிந்த மஹரிஷியும் கூட இவ்விதம் கேட்டார்”, என்கிறார். அதாவது, “உனது தாயாரை விட்டு பலவற்றையும் கூறும்படிச் செய்து, இராமனைக் கானகம் அனுப்பினாய். அத்துடன் நிற்காமல், இராமன் நீடித்தால் அடிவயிற்றில் தோன்றிய கட்டி போன்று எப்போதும் பாதகமே உண்டாகும் என்று எண்ணி, இங்கும் வந்து இராமனைத் துன்புறுத்தத் தேடுகிறாயோ”, என்று சந்தேகம் கொண்டான். அதாவது, பரதாழ்வானுடைய விதங்கள் குறித்து நன்கு அறிந்தும், பரதனுக்கு அவனுடைய தாயான கைகேயி ஸம்பந்தம் உள்ளதன் விளைவாக இவ்விதம் சந்தேகம் கொள்ளப்பட்டது. பொருட்களுடைய தன்மைகள் மூலமாக, ஒன்றுக்குப் பத்தாக காரணகார்யங்களை அறியக்கூடிவர்கள் வேடர்கள் ஆவார்கள். இவ்விதம் குகன் உள்ளபோதிலும், தனது எல்லைக்குள் பரதன் வந்து புகுந்தமை கண்டு மகிழ்ச்சி கொண்டாலும், “இராமனுடைய அடியார்கள் உள்ள இடம் தேடி வருவது மகிழ்ச்சியே” என்று எண்ணினாலும், “அரசர்களாக உள்ளவர்கள் இது போன்ற இடங்களில் வந்து புகும்போது கேள்வி ஏதேனும் மனதில் வைத்து அல்லவோ வருவர்?”, என்பது போன்று எண்ணினான். ஆகவே சாரம் அற்றவையும், கோபம் நிறைந்தவையும் ஆகியவற்றைக் கூறி, பரதனுடைய தாய் வழி சிந்தித்து, குகன் சந்தேகம் கொண்டான். இது போன்றே இந்தத் தாயாரும், தனது பெண்பிள்ளையானவள், தனது வியிற்றில் பிறந்த தூய்மை என்பதேயே காரணமாகக் கொண்டு, “திருக்கோளூரில் புகுவாள்”, என்று உறுதியாக்குகிறாள். “இராம பாணம் இலக்கு தப்புமோ? எனது மகள் செல்லும் ஊர் அதுவே ஆகும்”, என்றாள்.

வ்யாக்யானம் - (இளமான்) இப்பருவத்தில் இவளைத் தலக்கறுக்கும்போது அவ்வூரில் அவனேயாக வேண்டாவோ? (என்னிளமான்) க்ரம ப்ராப்தி பற்றாதவள். தன் மார்த்தவம் பாராதே பதறிக் கொண்டு போனாள். (புகுமூர்) காட்டுத்தீயிலே யகப்பட்டவன் பொய்கையும் பொழிலுந் தேடிப் புகுமாபோலே, ஸம்ஸாரமாகிற

பாலைநிலத்தில் காட்டுத்தீயிலே யகப்பட்டவனுக்கு உகந்தருளின நிலங்களானவை பொய்கையும் பொழிலும் போலேயிறே. புகுமூரென்கையாலே புக்கார் போகும் ஊர் அன்றென்கை. எம்பெருமானார் தெற்கேயெழுந்தருளாநிற்க, எதிரே வருகிறாள் ஒருபெண்பிள்ளையைக் கண்டு "எங்கு நின்றும்?" என்ன, "திருக்கோளூரில் நின்றும்" என்ன, "அவ்வூரில் புக்க பெண்களும் போகக்கடவராயிருப்பர்களோ!" என்றருளிச்செய்தார். "என்னிளமான் - மண்ணினுள் - புகுமூர் திருக்கோளூரே - இது திண்ணம்" இவள் போய்ப்புகுமூர் திருக்கோளூரே, இது நிச்சயம். இவ்வூரில் பிள்ளைகளைக் காணாவிட்டால், கோயிலுக்குள்ளே தேடும் அத்தனையிறே.

விளக்கம் – (இளமான்) - இந்த வயதில் இந்தப் பெண்பிள்ளையின் நாணத்தைக் கெடுப்பதற்கு அந்த ஊரில் உள்ள அவனேயாக மட்டும் இருக்கமுடியும். (என் இளமான்) - காட்டுத் தீயில் சிக்கிக் கொண்ட ஒருவன், எங்கேனும் குளமும் சோலையும் இருக்காதோ என்று தேடிச் சென்று அங்கு புகுவது போன்று, ஸம்ஸாரம் என்னும் காட்டுத்தீயில் அகப்பட்ட ஒருவனுக்கு, ஸர்வேச்வரன் விருப்பத்துடன் எழுந்தருளியுள்ள திவ்யதேசங்களே குளமும் சோலையும் போன்று உள்ளன அல்லவோ? "புகும் ஊர்" என்று கூறுவதால், அங்கு செல்ல விருப்பம் இல்லாதவர்கள், செல்லாத ஊர் என்று கருத்து. ஒருமுறை எம்பெருமானார் தெற்குத் திசை நோக்கி பயணித்தபோது, எதிரே வந்த ஒரு பெண்ணிடம், "நீ எங்கிருந்து வருகிறாய்?", என்றார்; இதற்கு அந்தப் பெண், "நான் திருக்கோளூரிலிருந்து வருகிறேன்", என்றாள்; உடனே எம்பெருமானார், "அந்த ஊரில் உள்ள பெண்கள் அந்த ஊரை விட்டு வெளியே செல்வார்களோ!" என்றார். "என்னிளமான் - மண்ணினுள் - புகுமூர் திருக்கோளூரே - இது திண்ணம்"; இவள் சென்று சேரும் ஊர் திருக்கோளூரே ஆகும் என்பது நிச்சயம்; அந்த ஊரில் உள்ள பெண்பிள்ளைகளை காண இயலவில்லை என்றால், அங்குள்ள கோயிலுக்குள் சென்று தேடுவார்களாம்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்